# என் பிள்ளைகளுக்காக அறிக்கை

**உங்கள் பிள்ளைகள் மீது 'வார்த்தையை ஜெபிப்பதை' விட பெரிய பலன்களை வேறு எதுவும் தருவதில்லை. உங்களுடையவர்களை பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், ஒவ்வொரு நாளும் இந்த ஜெபத்தை அவர்கள் மீது ஜெபியுங்கள்!**

பரலோக பிதாவே, என் பிள்ளைகளைப் பற்றிய உமது வார்த்தைக்காக நன்றி. என் கிரியைக்குப் பலன் உண்டென்றும், என் பிள்ளைகள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள் என்றும் அது கூறுகிறது.[1]

நீர் அவர்களுக்கு போதிக்கிறவராக இருப்பீர் என்றும், அவர்கள் சமாதானத்தில் நடப்பார்கள் என்றும் வாக்களித்தீர்.[2] உம்முடைய கட்டளைகளில் நான் மிகவும் பிரியமாயிருக்கிறபடியால் என் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் உம்முடைய ஆசீர்வாதத்தை அனுபவிப்பார்கள் என்று சொன்னீர்.[3]

என் சந்ததியின் மேல் உம் ஆவியையும், என் சந்தானத்தின்மேல் உம் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்றும், 'நான் கர்த்தருடையவன்' என்று என்றாவது சொல்லுவார்கள் என்றும் வாக்களித்தீர்.[4] அவர்கள் பெயர்கள் உமது உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறபடியால், அவர்களை நீர் மறப்பதில்லை என்றும், அவர்களை நிர்மூலமாக்க முயற்சிக்கும் எதையும் நீர் நிர்மூலம் ஆக்குவீர் என்றும் வாக்களித்துள்ளீர்.[5]

பிதாவே, என் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவீர் என்று வாக்களித்தீர், அதை நான் சுதந்தரிக்கிறேன்.[6] கர்த்தாவே, என் மேலிருக்கிற உம்முடைய ஆவியும், நீர் என் வாயில் அருளிய உம் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் என் வாயிலிருந்தும், என் பிள்ளைகளின் வாயிலிருந்தும், என் பிள்ளைகளின் பிள்ளைகளுடைய வாயிலிருந்தும் நீங்குவதில்லை என்றும், உம்முடைய நித்திய கிருபை அவர்கள் மேல் அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கும் என்று சொன்னீர்.[7]

கர்த்தாவே, என் பிள்ளைகளைப் பற்றிய இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுக்கு நன்றி. நான் அவைகள் மீது நிற்கிறேன், அவற்றை சுதந்தரிக்கிறேன், அவற்றை எனக்காகக் நிறைவேற்றுவீர் என்று நம்புகிறேன். ஆமேன்.

[1] எரேமியா 31:16–17
[2] ஏசாயா 54:13
[3] சங்கீதம் 112:1–2
[4] ஏசாயா 44:3–5
[5] ஏசாயா 49:16–17
[6] ஏசாயா 49:25
[7] ஏசாயா 59:21; சங்கீதம் 103:17

### எரேமியா 31:16-17

**நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

### ஏசாயா 54:13

**உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.**

### சங்கீதம் 112:1-2

**அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.**

### ஏசாயா 44:3-5

**தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப்போல வளருவார்கள். ஒருவன், நான் கர்த்தருடையவன் என்பான்;**

### ஏசாயா 49:16-17

**இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது. உன் குமாரர் தீவிரித்து வருவார்கள்; உன்னை நிர்மூலமாக்கினவர்களும் உன்னைப் பாழாக்கினவர்களும் உன்னைவிட்டுப் புறப்பட்டுப்போவார்கள்.**

### ஏசாயா 49:25

**என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்; உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன்.**

### ஏசாயா 59:21

**உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

### சங்கீதம் 103:17

**...அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.**



**For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.**

**DPM-India (English)**
admin@derekprince.in
derekprince.com/en-in

**DPM-India (Tamil)**
admin@derekprince.in
www.derekprince.com/ta

**DPM-Asia/Pacific**
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

**DPM-Australia**
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au